'அஸெஸர்' என்ற பெயரிலே 1,500 பேர் பெண்கள் அதிகமாக ஒரு 15 நாட்கள் போய் மீட்டர் ரீட் பண்ணுவார்கள்: அப்புறம், 15 நாட்கள் ஆபீஸிலே உட்கார்ந்து, பில் போடுவார்கள் என்ற அளவிலே அவர்களெல்லாம் கடந்த கால ஆட்சியிலே தேர்வு செய்யப்பட்டார்கள். வீட்டிற்கு வந்து மின் அளவு பார்ப்பது என்பது மிகவும் கொடுமையான காரியம். முக்கால்வாசி பெண்கள்தான், அவர்களுக்கு சிரமம் இருக்கிறது, உள்ளே போய்க் கதவைத் தட்டி, ரூமில் யாராவது இருக்கிறார்களா என்று பார்ப்பது பெண்கள் என்ற வகையிலே, சில practical difficulties for ladies to go alone to read the meters. இதையெல்லாம் கவனத்திலே கொண்டு, அவர்களையெல்லாம் ஜூனியர் அஸிஸ்டெண்ட்-ஆக மாற்றுவதற்கு, துறை முன்வரவேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். கிருஷ்ணகிரி துணை மின் நிலையத்தை மறந்துவிடவேண்டாம். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (12—5—1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14.03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

97. ஸதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1988–89-ஆம் ஆண்டிற்கான முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

98. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு நிறுவனத்தின் 1988–89-ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

99. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில் அரசு தலைமையிட மருத்துவமனையில், 6—9—1989 அன்று இறந்த விசாரணைக் கைதி திரு. கோபி (திரு. இராகவனின் மகன்) யின் இறப்பு குறித்து நீதிபதி திரு. ஏ. இராமமூர்த்தி விசாரணைக் குழுவின் அறிக்கை [1952ஆம் ஆண்டு விசாரணைக் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள் எதுவுமில்லை.**